விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை (19.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 265

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## கரவெட்டியில் வைத்து இளைஞன் சுட்டுக்கொலை

(துன்னாலை)

கரவெட்டி மாதா கோயிலடியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் கரணவாய் கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த செல்வராசா சாந்தகுமார் (வயது 25) என தெரிவிக்கப்பட்டது.

கோழி வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ளும் இவரை அழைத்துச் சென்ற ஒருவர் மாதா கோயிலடிக்கு பின்புறமாக உள்ள ஒழுங்கையில் வைத்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் குடும்பஸ்தர் இரவில் சுட்டுக்கொலை

(சுன்னாகம்)

அளவெட்டி ஈரட்டி என்னும் இடத்தில் 5 பிள்ளைகளின் தந்தை ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 8.40 மணியளவில் குறித்த குடும்பஸ்தரின் வீட்டிற்கு நடந்து சென்ற ஆயுததாரிகள் அவரை அழைத்து வீட்டு வாசலில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தச்சுத்தொழில் செய்து வரும் 5 (04 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுப்பிட்டியில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டியில் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டி தெற்கைச்சேர்ந்த லோகநாதன் செல்வக்குமார் (வயது 26) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வீட்டிலிருந்து சென்ற குறித்த இளைஞன் மீது ஒழுங்கை ஒன்றில் வைத்து ஆயுததாரிகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

# பொத்துவில் பகுதியில் வைத்து

# 11 முஸ்லிம்கள் வெட்டிக்கொலை

## மேலும் ஒருவர் படுகாயம்

(அம்பாறை)

அம்பாறை பொத்துவில் பகுதியில் வைத்து 11 முஸ்லிம் இளைஞர்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நீர்ப்பாசனக் கால்வாய் ஒன்றை துப்புரவு செய்யச் சென்றிருந்த இவர்கள் கூரிய ஆயுதங்களால் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த ஒருவர் ஆபத்தான நிலையில் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)



## கோப்பாயில் குடும்பஸ்தர் நேற்று சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் வர்த்தகர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான முருகையா குகராஜ் (வயது 36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தகரின் கடைக்குச் சென்ற ஆயுததாரிகள் இருவர் வாழைப்பழம் கேட்டதாகவும் அதற்கு அவர் நிறுட்டதற்காக வாழைக்குலையில் பழம்வெட்டியபோது பின் பகுதியாகச் சென்று தலையிலும் முதுகிலும் துப்பாக்கிச்சூடு நடத்தி (04 ஆம் பக்கம் பார்க்க)

## 9 மணி நேர மின்சாரம் இன்று முதல் கிடைக்கும்

### மின்சாரசபை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று முதல் 9 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பகலில் 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும்,இரவில் 7 மணி முதல் 11 மணி வரையும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக மின்சாரம் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் செயலிழக்கும் அபாய நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து உரிய தரப்பினர் அவசர மாகக்கூடி மேற்படி நேர அட்டவணையில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் மின்சாரத்தை வழங்க (04 ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில் ஒருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் ஆயுததாரிகளால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சண்முகநாதன் சுரேஷ்குமார் (வயது 35) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் குறித்த குடும்பஸ்தவரின் வீட்டிற்கு நடந்து சென்ற ஆயுததாரிகள் அவரை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து சுமார் 600 பயணிகளுடன் கப்பல் ஒன்று நாளை அதிகாலை திருகோணமலையை நோக்கி புறப்படவுள்ளது.

இக் கப்பலில் பயணிப்பதற்கு வெளிநாட்டு கடவுச்சீட்டை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்பட்டது.

அக் கப்பலில் பயணம் செய்ய விரும்பு வோரை இன்று காலை 8 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ்.சிங்கள மகாவித்தி யாலயத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.அவர்கள் உரிய அனைத்து ஆவணங்களுடன் சமு (04 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் படுகொலைக்கு அதிரடிப்படையினரே பொறுப்பு

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

முஸ்லிம்களின் படுகொலைகளுக்கு விசேட அதிரடிப்படையினரே பொறுப்பு என மக்கள் நம்புவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பி.பி.ஸி.தமிழோசைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.


இந்தக் கொலையுடன் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜிம்பிறவுண் அடிகளார் எங்கே?

**கடந்த ஒரு மாத காலமாக கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டுமல்ல மனித நேயமுள்ள ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஜிம்பிறவுண் அடிகளார் எங்கே? என்ற வினா தவிர்க்க இயலாத ஒன்றாக மீண்டும் மீண்டும் எழுகின்றது.**



எம் மக்களின் புலம்பல் பாட்டாய்...

### யார் இந்த ஜிம்பிறவுண்?

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் பெற்றோருக்கு மூத்த பிள்ளையாக பிறந்து கத்தோலிக்க திருச்சபையின் பணிக்குருத்துவத்திலே தன்னை இணைத்துக் கொண்ட 34 வயதாகிய ஒரு இளங் குரு தான் இவர். குருவாகி இரண்டாண்டுகள் மன்னாரில் பணியாற்றிய பின் யாழ்ப்பாண மறை மாவட்டத்தில் பணியாற்ற கடந்த யூலை மாதம் தான் அவர் வருகை தந்தார். மண்டைதீவு - அல்லைப்பிட்டி பங்கு பணியாளராகப் பொறுப்பேற்று சில நாட்களுக்குள்ளாகவே அவர் தனக்குரிய சிலுவையைச் சுமக்க நேரிட்டது.

### மக்களைப் பிரியாத...

கடந்த 11ம் திகதி வட பகுதியில் வெடித்த போரில் முக்கிய ஒரு களமுனையாக அல்லைப்பிட்டியும் அமைந்திருந்தது. பரஸ்பரம் பரிமாறப்பட்ட ஷெல்களின் ஓசையும், வேட்டொலிகளும் திடீரென மக்களை அச்சத்துக்குள்ளாக்க, இறைவனின் இல்லம் தான் ஒரே தஞ்சமென மக்கள் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். மிக நீண்டதாக நகர்ந்த அந்த கரிய இரவில் எஞ்சிநின்றதெல்லாம் ஷெல் ஓசைகளும் மக்களின் வேண்டுதல் ஒலிகளும் தான். 13ம் திகதி ஞாயிறு பலருக்கு புலர்ந்த பொழுது, ஆலயத்திலும் அதன் அருகிலும் தஞ்சம் புகுந்திருந்த 20க்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர இரவானது. இறந்தவர்களை ஒரு புறமாக விட்டு விட்டு படுகாயத்தினால் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவர்களையும் அச்சத்தில் உறைந்துபோன ஏனையோரையும் பாதுகாப்பது தனது பொறுப்பென துணிவு கொண்டார் ஜிம்பிறவுண் அடிகளார்.

சூரியக் கதிர்கள் இருள் முகம் துடைக்கும் அந்த அதிகாலைப் பொழுதில் அப்பாவி மக்களின் கண்ணீரும் செந்நீரும் துடைக்க வெள்ளைக் கொடியேந்திப் புறப்பட்டார் ஜிம்பிறவுண் அடிகளார். அவர் முன்நடக்க தயங்கித் தளர்ந்து காயப்பட்டோரையும் சுமந்தபடி பின்செல்லுகின்றனர் மக்கள். அல்லைப்பிட்டிச் சந்தியை அவர்கள் அணுகிய போது ஓரடி முன்வைத்தாலும் உயிரில்லை என்ற கட்டளை பிறக்கின்றது. அனைவரையும் அச்சம் ஆட்கொள்ள மக்களுக்காக மண்டியிட்டார் ஜிம்பிறவுண் அடிகளார். முழந்தாட படியிட்டு இறைவனிடம் மட்டுமே ஏந்திய கரங்களை... உயர விரித்து தன் மக்களுக்காக உயிர்ப்பிச்சை கேட்டார் அவர். அவரை மட்டும் முன் வரவழைத்து சிறிது நேரம்பேசிய பின் விரும்பினால் அவரை மட்டும் போக அனுமதி அளிக்கப்பட்டது. மக்களைப் பிரிய திடமாகவே மறுத்து விட்டார் அவர். இரக்கத்தின் பொருட்டு அல்லா விட்டாலும் அவரின் தொல்லையின் பொருட்டு காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கும் ஏனையோரைல ஊர்காவற்றுறைக்கும் எடுத்துச் செல்ல அனுமதி கிடைத்தது.

இவ்வேளையில் மீண்டுமொரு சோதனை. இளவயதினரை மட்டும் தனியே பிரித்து நிறுத்தி விட்டு ஏனையோரை அழைத்துச் செல்லுமாறு பணிப்பு. மீண்டும் குருவின் திடமான மறுப்பு. எக்காரணம் கொண்டும் யாரையும் விட்டுச் செல்ல மறுத்தது நல்ல ஆயனுக்குரிய அவரது அன்புள்ளம். "என் மக்களை போக விட்டு விடுங்கள்" என்று உறுதியோடு நின்ற அவரை நவீன மோசே என்று வரைவிலக்கணப்படுத்தினார் அவருடைய ஒரு குரு நண்பன்.

### முகமற்றோரின் முகமாக குரலற்றோரின் குரலாக

மேற்சொன்ன நிகழ்வு நடந்து சரியாக ஒரு வாரத்தின் பின்னாக 20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மண்டைதீவில் இருந்த தம் மக்களுக்கு சமயக் கடமைகளை நிறைவேற்றி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட ஊரடங்கு தளத்தப்பட்ட வேளையிலே திரு. விமலதாஸ் என்னும் உதவியாளரோடு புறப்பட்டார் அருள்தந்தை. மண்டைதீவு செல்ல அனுமதி கிடைக்கவில்லை. யாழ்நகர் வந்து மீண்டும் 2மணியளவில் ஊர்காவற்றுறைக்கு திரும்பும் வழியில் அனுமதி பெற்று அல்லைப்பிட்டியில் நுழைந்தார் அருள் தந்தை. அன்று அல்லைப்பிட்டியில் நுழைந்த ஜிம்பிறவுண் அடிகளாரும் அவரது உதவியாளரும் ஒருமாதமாகியும் இன்றும் திரும்பவேயில்லை.

1996இன் பிற்காலத்திலிருந்து இன்று வரை காணாமல் போனோரின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. மற்றும் கடந்த டிசம்பர் மாதத்தின் பின் குறிப்பாக சென்ற 11ம் திகதியின் பின் காணாமல் போனோரின் எண்ணிக்கை அச்சம் தரும் வகையில் அதிகரித்து வருகின்றது. புதை குழிகள் இல்லாமலே புதையுண்டவர்களும் இடுகாடுகள் இல்லாமலே எரியுண்டவர்களும் இவர்களில் அநேகம். இவர்களது முகம் மண்ணில் மறைந்து போயிற்று. இவர்களது குரல் காற்றில் கரைந்து போயிற்று. முகம் அற்ற இவர்களின் முகமாகவும் குரல் அற்ற இவர்களில் குரலாகவும் எழுச்சி காணுகிறார் எங்கள் ஜிம்பிறவுண்.

இன்று காணாமல் போனோரின் பிரதிநிதியாக அவரது முகம் உலகில் வலம் வருகிறது. அவர்கள் அனைவரதும் பெயராக இவரது பெயர் உரத்து உச்சரிக்கப்படுகின்றது. காணாமல் போவோருக்காய் குரல் கொடுப்போரின் பேனாக்களின் கூர்முனையில் இவரது வரலாறு உயிர்ப்பாய் துடித்துக் கொண்டிருக்கிறது.


*சோதரா!*<br>
*இன்றும் உன்னைத் தேடி*<br>
*நாங்கள்*<br>
*காற்றைக் கலைக்கிறோம்*<br>
*கடலைக்*<br>
*கேட்கிறோம்*<br>
*கண்ணீர் வடிக்கிறோம்.*<br>
*ஆயினும்*<br>
*எம் கைக்கெட்டா*<br>
*உயரத்தில்*<br>
*நீ எம் மக்களின்*<br>
*புலம்பல் பாட்டாய்...*

**பதில் கேட்டு...**

● ஆயர் அவர்கள் இரண்டு வேண்டுகோள்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். ● திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். ● இலங்கை ஆயர் பேரவை வேண்டுகோள்களை சமர்ப்பித்துள்ளது. ● யாழ் நீதி சமாதான ஆணைக் குழு மூன்று வேண்டுகோள்களை விடுத்துள்ளது. ● மன்னார் மறைமாவட்டம் பேரணி நடாத்தி வேண்டுகோள் சமர்ப்பித்துள்ளது. ● திருமலை - மட்டுநகர் மாவட்டம் பேரணி நடாத்தி வேண்டுகோள் சமர்ப்பித்துள்ளது. ● புதுக்குடியிருப்பில், கிளிநொச்சியில் உண்ணாவிரதங்களும் பேரணிகளும் நடாத்தப்பட்டு வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ● யாழ் மறைமாவட்டத்தில் தொடர்ச்சியான சுழற்சிமுறை உண்ணாவிரதம் யாழ்பேராலயத்தில் நடாத்தப்பட்டது. ● பங்குகள் தோறும் இன்னும் உண்ணா நோன்பும் வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. வேண்டுகோள்கள் பங்குகளால் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருகின்றன. ● சர்வதேச மன்னிப்புச்சபை இன்னும் இதர மனித உரிமை அமைப்புக்கள் வினா எழுப்பியுள்ளது.

**இருந்தும் இன்று வரையும் தெளிவான பதிலேதுமில்லை தொடர்ந்தும் தேடுகின்றோம்.**

## விமலதாஸ் - பொதுப்பணியாளன்



முதுமை... தளர்ந்த நடை... மெலிந்த தோற்றம்... முகத்தில் நரைத்த தாடி... மெதுவாக நடந்து எனக்கு முன் அமர்ந்தார் வென்சஸ்லாஸ். இவர்தான் ஜிம்பிறவுண் அடிகளாருடன் உதவியாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது காணமல் போன திரு. வின்சன் விமலதாசுடைய தந்தை. மகன் காணாமல் போன சோகத்தில் இருக்கிறார் என்ற உணர் வோடு ஆறுதலாக ஏதாவது சொல்வோம் என்ற எண்ணத் தோடு உரையாடலை வளர்த்த போதுதான் எனது முகத்தில் அறைந்தது அந்த முதியவரினுள் உறைந்திருந்த சோகம். 5 ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையையும் செல்வங்களாக பெற்றெடுத்த அவர் ஏற்கனவே இரண்டு ஆண் பிள்ளைகளைக் காணாமல் போன பட்டியலில் இழந்து விட்டிருக்கிறார். 1990ஆம் ஆண்டியிலே கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அந்த இருவர் காணாமல் போயினர். விமலதாஸ் காணமல்போனது அந்த வரிசையில் மூன்றாவது.

விமலதாஸ் துடிதுடிப்பானவர். எப்போதும் ஆலயப் பணிகளுக்கும் பொதுப் பணிகளுக்கும் முன்னிற்பவர். சிறுவனாக, இளைஞராக திருமணமானவராக எந்நிலையிலும் சமய சமூக விடயங்களில் அல்லைப்பிட்டியில் முன்னின்று உழைத்தே வந்துள்ளார். ஊரில் உள்ள சமய சமூக அமைப்புக்களில் பல தடவைகளில் பல விதமான பணிப் பொறுப்புக்களை கையேற்று சிறப்பாக பணியாற்றியுள்ளார். 'ஐயோ' என்றால் உதவிக்கு வரும் அவரது இயல்பு தான் இன்றைய அவரது நிலை வரை அவரைக் கொண்டு வந்துள்ளது. இவரது சேவை மனத்தை அடையாளம் கண்டு தான் ஜிம்பிறவுண் அடிகளார் அங்கு பணியேற்ற சில நாட்க ளிலேயே எல்லா விடயங்களுக்கும் இவரது துணையையே நாடியுள்ளார். அல்லைப்பிட்டியிலிருந்து மக்களை மீட்டு வந்து அவர்களுக்கு உணவளித்து ஜிம்பிறவுண் அடிகளார் ஆற்றிய ஒவ்வொரு பணியிலும் தோளோடு தோள் நின்று விமலதாசும் உதவியுள்ளார். அதனால் தானோ என்னவோ பணியில் மட்டுமல்ல பலியிலும்...

இளம் மனைவியும் நடந்ததன் தார்ப்பரியத்தை உணராத ஐந்து பிள்ளைகளும், அறுவரில் எஞ்சிய மூன்று பேரில் ஒருவரது மனைவி பிள்ளைகள் காயங்களோடு இன்றும் வைத்தியசாலையில் இருகக யாருக்காக அழுவ தென்று தெரியாத அந்த முதியவரும்... என்னிடம் எஞ்சியிருந்தது பெருமூச்சு மட்டும்தான்.

## கடவுளும் பார்த்து நிற்க...

*காற்றும்*<br>
*கடலும்*<br>
*ஏன்*<br>
*கடவுளும் பார்த்து நிற்க.*<br>
*அவர்*<br>
*மறைந்து போனார்.*

*உப்புக் காற்றுக்கும்*<br>
*தெரியும்*<br>
*தந்தையின் கதை.*<br>
*உவர்*<br>
*நிலத்துக்குத்*<br>
*தெரியும்*<br>
*அவரின் தடம்*<br>
*ஓயாமல்*<br>
*இரையும்*<br>
*அலைக்குத் தெரிந்திருக்கும்*<br>
*அந்த*<br>
*அவலம்.*

*அவர்*<br>
*கலகம் செய்யவில்லை*<br>
*கதவடைப்பு செய்யவில்லை*<br>
*அறிக்கை விடவில்லை*<br>
*ஆயுதம் ஏந்தவில்லை.*

*எறிகணைகள்*<br>
*வீழ்ந்த போது*<br>
*வாழ்ந்தார்*<br>
*காயங்கள்*<br>
*மரணங்கள் நிகழ்ந்தபோது*<br>
*இருந்தார்.*<br>
*அச்சம்*<br>
*சூழ் அந்தப் பொழுதில்*<br>
*எல்லாம்*<br>
*அவர்*<br>
*இருந்தார்.*

*அன்றாடம்*<br>
*காணாமற் போகும்*<br>
*பத்தோடு*<br>
*பதின் ஒன்றா?*<br>
*நெஞ்சு*<br>
*அழுகின்றது.*

*எங்கே?*<br>
*கேள்விகள்*<br>
*வியாபிக்கின்றன*<br>
*குற்றம் என்ன?*<br>
*யாரிடம் முறையிடுவோம்?*

*அச்சடிக்கப்பட்ட*<br>
*விடைகளே*<br>
*வந்து*<br>
*கொண்டிருக்கின்றன.*<br>
*திட்டமிட்ட*<br>
*பதில்களே*<br>
*கௌரவமாக*<br>
*கிடைக்கின்றன*<br>
*"சென்றுவிட்டார்"*<br>
*"போய்விட்டார்"*<br>
*"கடந்துவிட்டார்."*

*மக்களோடு*<br>
*இருக்கவிரும்பினார்*<br>
*காயங்களுக்கு*<br>
*மருந்தாகியிருந்தார்.*<br>
*நெஞ்சுக்கு*<br>
*நேரே*<br>
*மரணத்தின் பற்கள்*<br>
*நீண்ட போதும்*<br>
*அவர்*<br>
*அசையவில்லை.*

*இதோ*<br>
*குருத்துவம்*<br>
*இவரால்*<br>
*பெருமையடைகிறது.*

*உப்புலர்ந்த மண்ணே*<br>
*வாரித் தரும்*<br>
*கடலே*<br>
*வீசும் கோடைக்காற்றே*<br>
*உனக்குத்*<br>
*தெரியும்*<br>
*அவனது*<br>
*இறுதி மூச்சு*<br>
*எவர்*<br>
*கையில்*<br>
*இருந்தது என்று.*

**காணமல் போய் அந் நாள் நினைவில்**

ஜிம்பிறவுண் அடிகளாரைத்தேடும் குரு நண்பர்களின் இதயக் குமுறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் சிந்தியுங்கள்; பிறகு பேசுங்கள்; பேசினால் குறைவாகப் பேசுங்கள்.

—அப்துல் ரஹீம்

வலம்புரி

## ஏ-9 பாதையை விடுத்து கேரதீவுப் பாதையைத் திறப்பதா?

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியனவாம் சொல்லிய வண்ணம் செயல்'

என்பது வள்ளுவனின் முடிபு. எதை வேண்டுமானாலும் எவரும் கதைத்துவிட்டுப் போகலாம். அவற்றை நடைமுறைப்படுத்துவது அதன் எதிர் விளைவுகளுக்கு முகம் கொடுப்பதிலுமே செயலாக்கம் அமைந்துள்ளது.

அவ்வாறாயின் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல ஒரு புதிய கதையை அவிழ்த்து விட்டுள்ளார்.

ஏ-9பாதைக்குப் பதிலீடாக-சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதுவே அந்தக் கதை.

இலங்கையின் அரசியல் வரலாற்றை-குறிப்பாக விடுதலைப்போராட்டத்திற்குப் பின்னரான வரலாற்றை நன்கு தெரிந்து கொண்டவர்கள் கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பது பற்றி கதைத்துக் காலத்தை வீணாக்க மாட்டார்கள்.

எனினும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பது பற்றி கதைத்து நேரத்தை வீணாக்கியுள்ளார் என்று கூற வேண்டும்.

2002 ஆம் ஆண்டு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்திடுவதற்கு முன்னதாக கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை திறப்பது பற்றி பலரும் பேசிக் கொண்டதும் உண்டு.

ஆயினும் படைமுகாம்களைக் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நகர்த்துவது தொடர்பில் அந்தப் பாதை திறக்கும் விவகாரம் நின்று போனது.

பின்னர் 2002 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையையடுத்து ஏ-9 பாதை திறக்கப்பட்டது.

இது அப்போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்திருந்த ஹெகலிய ரம்புக்வெலவுக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை.

யாழ்ப்பாணத்தையும் ஏனைய வெளிமாவட்டங்களையும் இணைப்பதற்கான தரைவழிப் பாதை என்பது ஏ-9 ஆகவேயிருக்கும்.

ஏ-9பாதை தடைப்பட்டு போயிருந்த காலம் போக, 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏ-9 பாதைப் பயணத்துக்கான தரைவழிப்பாதையாக விருந்தது.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் நடுப்பகுதியில் 'பெயரில்லாத யுத்தம்' ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஏ-9பாதை தடைப்பட்டுப் போயுள்ளது.

பாதை தடைப்பட்டதனால் உணவுப் பஞ்சம், எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

சுருங்கக் கூறின் ஏ-9பாதை தடைப்பட்டுள்ளதால், குடாநாட்டு மக்கள் ஓர் யுத்த பிராந்தியத்துக்குள் அகப்பட்டுள்ள மன நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையைச் சீர்ப்படுத்த வேண்டுமாயின் ஏ-9பாதையை முதலில் திறந்தாக வேண்டும். இதைவிடுத்து புதுப் புதுப் பாதைகளைத் திறப்பதாகக் கூறப்படும் கருத்துக்கள் சமாதானத்தை சீர்குலைத்துவிடும்.

இனப்பிரச்சினை சமாதானத்தின் மூலம் தீர வேண்டும் என யாரேனும் விரும்புவார்களாயின் அதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் இணங்கிக் கொள்ளம் திட்டங்களும் நடைமுறைகளுமே சாத்தியமானவையாகும்.

இதைவிடுத்து தத்தம் சிந்தனைகளில் தோன்றும் விடயங்களை அவிழ்த்து விடுவதனால் சமாதானத்துக்கு மாறாக சண்டையே சூழும்-மூளும்.

# முஸ்லிம்களின் படுகொலைக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படை முகாம் அருகே 11 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப்படுகொலைச் சம்பவத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் விடுத்துள்ள அறிக்கையில்;

அம்பாறை யால தேசிய பூங்கா அருகே 11 முஸ்லிம் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டனம் தெரிவிக்கின்றனர். இப் படுகொலைச் சம்பவம் நடந்த இடம் அருகே இராணுவ முகாம் அமைந்துள்ளது. அந்த இடம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இத்தகைய படுகொலைகளை நிகழ்த்தும்போது தமிழீழ விடுதலைப்புலிகளை குற்றஞ்சாட்டுவதை நீண்டகாலமாக இராணுவம் செய்து வருகிறது. இதற்கு நல்லஉதாரணமாக மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைச் சுட்டிக்காட்டலாம்.

அம்பாறை பனாமா நகருக்கு அருகே இக் கொலைச் சம்பவம் நடந்ததாகவும் அவர்கள் அனைவரும்காணாமல் போனவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகளின் கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# இந்திய அமைதிப் படை இருந்திருந்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டிருக்கும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)



இந்திய அமைதிப் படை இருந்திருந்தால் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டிருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் 100-வது பிறந்த நாள் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போது ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர் பல்வேறு தமிழ் ஆயுதக் குழுக்கள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பின. இந்திய அமைதிப் படையின் நடவடிக்கையானது விடுதலைப் புலிகளையும் ஜனநாயகப் பாதைக்குக் கொண்டு வரும் வகையில் இருந்தது.

ஜே.வி.பியின் அழுத்தத்தினால் அமைதிப் படை வெளி யேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்கான விலை யையே இன்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ச-5)

## கட்டடங்கள் அமைப்பதை தவிர்க்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையையும் போக்குவரத்துப் பிரச்சினைகளையும் சாதகமாகப் பயன்படுத்தி பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது பிரதேச சபைச் சட்டங்களுக்கு உட்படாத வகையில் பல கட்டடங்கள், சுற்றுமதில்கள் என்பன வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டடங்கள் சுற்று, மதில்கள் என்பவற்றை அமைப்பவர்கள் சட்டப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று அவற்றினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் பொதுமக்களை கேட்டுள்ளார். (ச)

## சிங்களப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித்திணைக்களத்தின் அனுசரணையுடன் அரசாங்க அலுவலகர்களுக்கு யாழ்/நெல்லியடி ம.ம.விஇல் நடைபெற்றுவந்த அடிப்படைச் சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் வழமைபோல் நடைபெறும் என வட.கிழக்கு மாகாண யாழ்.பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நலன்புரி நிலையங்களின் நிலைமைகள் தொடர்பாக நாளை முற்பகல் 10 மணிக்குப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் விசேட பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு இதனுடன் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் உதவி வழங்கும் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சகல சுகாதார வைத்திய அதிகாரிகளையும் நடமாடும் மருத்துவ சேவையினரையும் பங்குபற்றுமாறு யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

(பருத்தித்துறை)

வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்பாள் சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.இத் தேர் 50 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வங்கியாளர் பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

(யாழ்ப்பாணம்)

வங்கியாளர் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 23,24 மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என கொழும்பு வங்கியாளர் கற்கை நிலையத்தின் பரீட்சைகளுக்குப்பொறுப்பான அத்தியட்சகர் சி.ஜே.பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

தேர்வு அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் தங்களுக்குரிய பதிவு இலக்கத்தையும் தனது அடையாள அட்டை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களையும் பரீட்சை நிலையத்திற்கு கொண்டுசென்று பரீட்சைக்குத் தோற்றக் கூடியவகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சையின் இணைப்பாளர்களாக யாழ்.வலய கல்வி அத்தியட்சகர் வி.ரி.செல்வரத்தினமும் வலிகாமம் பகுதி வலயக் கல்வி அதிகாரி பி.விக்னேஸ்வரனும் அமர்த்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## அடையாள அட்டைகள் பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தினுள் பின்வருவோருடைய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இரத்தினதுரை விஜயகுமாரி (ஐங்கரன் வீதி,சுதுமலை, தெற்கு), மயூரன்(மாவிட்டபுரம்,தெல்லிப்பழை), சுசிலா சிவலிங்கம் (குப்பிளான் தெற்கு), அப்புத்துரை அனுசுஜா(கல்லந்தாழ்வு, காரைநகர்), வீரசிங்கம் பூபதி(514/14, வைத்திய சாலை வீதி, யாழ்ப்பாணம்), இராசையா பத்மநாதன்(பழைய வீதி; கோப்பாய் தெற்கு),

சிதம்பரன் யோகராணி(5ஆம் வட்டாரம் ,அனலைதீவு), சண்முகம் வீரசிங்கம்(முத்தமிழ் வீதி, கொட்டடி யாழ்ப்பாணம்), கிருஷ்ணபிள்ளை ஜெசிந்தா(முழங்காவில், விநாயகபுரம்), தளையசிங்கம் ரஞ்சன்(கொக்குவில் கிழக்கு), சின்னத்துரை அருந்ததி (இருபாலை கிழக்கு, கோப்பாய்). (ச)

## விண்ணப்பம் கோரல்

வடக்குக் கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் முகாமை உதவியாளர் அதிசிறப்பு வகுப்புக்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிக்கு அனுப்பப்படவேண்டும்.

இதற்கான விளம்பரத்தை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும் என வடக்குக் கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்குப் பகுதியில் நேற்று 12 மணிவரை ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள 513 ஆவது பிரிகேட் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் நேற்று ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊர டங்கு நேற்று நண்பகல் 12 மணிக்கே நீக்கப்பட்டது.மீண்டும் மாலை 6 மணிக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

இதனால் அரச உத்தியோகஸ்தர்கள் எவரும் கடமைக்குச் செல்ல வில்லை. குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்களும் செயற்பட வில்லை.

கே.கே.எஸ்.வீதிக்கு மேற்குப் புறமாகவுள்ள பகுதிகளான மருதனார்மடம்,சுன்னாகம், கொக்குவில் மேற்கு, மானிப்பாய்,சங்கானை,சண்டிலிப்பாய் மற்றும் வட்டுக் கோட்டை போன்ற பகுதிகளிலேயே ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை 513 ஆவது பிரிகேட் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும் அப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளை எவையென விளங்கிக்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (ச-5)

# போக்குவரத்துச் சபையின் சேவைகள் இன்றுமுதல் வழமைக்குத் திரும்பும்?

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் இன்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

டீசல் பற்றாக்குறை காரணமாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந் நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மேற்கொள்வதற்கான டீசல் போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

டீசல் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அவர்கள் இன்று முதல் தமது சேவையை மேற்கொள்வார்கள் என கூறப்பட்டது.

இதேவேளை நேற்று சீரான போக்குவரத்துச்சேவைகள் இடம்பெறாமையினால் அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தனியார் சிற்றூர்திகளும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை மேற்கொள்வதினால் போக்குவரத்து பிரச்சினை ஏற்பட்டது. கடமைக்குச் சென்ற அரச உத்தியோகஸ்தர்கள் நேர காலத்துடனேயே தமது கடமையை நிறைவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் இன்று இடம் பெறுமானால் போக்குவரத்துப் பிரச்சினை தீருமென ஊழியர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (ச)

## கப்பல்...

கமளிக்குமாறு கேட்கப்பட்டுள் ளனர். பயணி ஒருவர் 20 கிலோ கிராம் பொதியைக் கொண்டு செல்வதற்கே அனுமதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிமாவட்ட அரச உத்தியோகஸ்தர்கள் ,மாணவர்கள்,நோயாளர்கள் என்போரும் அக்கப்பலில் அழைத்துச்செல்லப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## 9 மணி நேர...

நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 11 ஆம் திகதிக்குப் பின் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுவந்த மின்சாரம் டீசல் பற்றாக்குறையின் காரணமாக முற்றாக செயலிழக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று முதல் 9 மணிநேரம் மின் சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ச)

## முஸ்லிம்...

தொடர்பாக மக்கள் மத்தியில் பதற்றம் காணப்படுவதாக அவர் கூறினார்.

குறிப்பாக அதிரடிப்படையினரின் முகாம்கள் சூழவுள்ள இந்த பிரதேசத்தினுள்ளே விடுதலைப்புலிகள் நுழைந்து இவ்வாறான கோரச் செயலைப் புரிவது அசாத்தியமானது என மக்கள் தெரிவிப்பதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

இந்தக் கொலைகளின் பின்னணியிலே இலங்கை பாதுகாப்புப்படையினரே சம்பந்தப்பட்டிருக்கலாமா என்ற அளவிற்கு மக்களின் பார்வை இருப்பதுடன் அண்மைக் காலமாக விசேட அதிரடிப்படையினருக்கும் இவ்வூர் மக்களிற்குமிடையே பல விதமான முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னணியில் நேற்று முன்தினம் மையவாடிப் பிரச்சினையூடாக எழுந்த தகராற்றினாலும் விசேட அதிரடிப்படையின் முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரி முஸ்லிம் மக்களுடன் மிக மோசமாக நடந்துகொண்டார் என குற்றஞ்சுமத்தப்படுவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களை மிகவிரைவாக பொலிஸார் அப்புறப்படுத்தியமை அவர்கள் இப்போதைக்கு ஒழுங்கான விசாரணைகளை நடாத்தி அதில் சரியான சாட்சியங்களைத் திரட்டி எடுக்கும் விடயங்களில் ஒரு தவறை அப்பிரதேசப் பொலிஸார் இழைத்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த கொலைகளுடன் தொடர்புடையவர் என மக்களால் சந்தேகிக்கப்படும் விசேட அதிரடிப்படையின் குறித்த முகாமின் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்வதுடன் நீதி நியாயமான விசாரணைகளை நடத்த வேண்டுமென மக்கள் கேட்பதாகவும் ஹக்கீம் தெரிவித்தார். (ச-5)

# சட்டத்தின் ஆட்சியைச் செயற்படுத்த இலங்கை அரசு தோற்று விட்டது

## ஐ.நா.மனித உரிமை பொறுப்பாளர் கவலை

சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்தவும் மக்களைப் பாதுகாக்கவும் இலங்கை அரசாங்கம் தவறி விட்டது என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பொறுப்பாளர் லூயிஸ் ஆர்பௌர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கூட்டத்தை நேற்று தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ;

இலங்கையில் நாளாந்தம் காணாமல் போவதும் கொல்லப்படுவதும் நடைபெற்று வருகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் 2 இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இனப் பிரச்சினையில் பொதுமக்கள் தான் சிக்கியுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய அளவில் மனித உரிமைகளை மீறியிருப்பினும் அரசாங்கமானது மனித உரிமைகளை அதிகளவில் மீறுகிறது.

சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துவதில் அந்நாடு தோல்வியடைந்து விட்டது. நாட்டின் அனைத்து மக்களுக்குமான பாதுகாப்பை அளிப்பதில் தோல்வியடைந்து விட்டது.பல வழக்குகளில் விசாரணைகள் நடத்தப்படாமல் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் பாதிக்கப்பட்டோருக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகம் கண்காணிப்பது முதன்மையானதும் அவசரமானதுமாகும். இவை வெறும் யுத்த நிறுத்த மீறல்கள் மட்டுமல்ல.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும் மீறுவதாகும். தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறார் படைச்சேர்ப்பும் கவலைக்குரியதானதென்றார் அவர். (ச)

# நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி.பிரசாரம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே ஈடுபடுவதை நிறுத்த மக்கள் முன்வர வேண்டுமென தேசாபிமான தேசிய அமைப்பு கோரியுள்ளது.

இது குறித்து மாவட்ட ரீதியிலாக பொது மக்களுக்கு புரிந்துணர்வு ஏற்படுத்தப்போவதாக அவ் அமைப்பின் பேச்சாளரும் ஜே.வி.பியின் பிரசார செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக கம்பஹா, அநுராதபுரம், கேகாலை மற்றும் காலி ஆகிய இடங்களில் தமது எதிர்ப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# ஜனாதிபதி மகிந்த -சந்திரிகா நியூயோர்க்கில் சந்திப்பர்?

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நியூயோர்க்கில் சந்தித்து பேசவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் 61 ஆவது வருடாந்த அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி நேற்று முன்தினமிரவு நியூயோர்க் சென்றிருந்தார்.

யுனிசெவ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க் சென்றுள்ளார்.

இவர் யுனிசெவ் அமைப்பின் தெற்காசிய வலயத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றதாக கூறப்படுகிறது.

இருவரது நிகழ்வுகளும் நிறைவு பெற்றதும் உத்தியோக பூர்வமற்ற பேச்சில் அவர்கள் ஈடுபடுவர் என தெரிவிக்கப்பட்டது. (ச)

# ஊடகவியலாளர் குழு இன்று யாழ்.வருகை

(கொழும்பு)

யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து பார்வையிடுவதற்காக தென்னிலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

விமானம் மூலம் பலாலியை வந்தடையும் அவர்கள் தென்மராட்சி, வடமராட்சி மற்றும் யாழ்.நகரப்பகுதிகளை பார்வையிடவுள்ளனர். (ச-5)

## கோண்டாவிலில்...

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை நடத்திய யாழ்.மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ச-5)

## கோப்பாயில்...

விட்டு தப்பிச் சென்றதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை நடத்திய யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## சிறுப்பிட்டியில்...

துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை நடத்திய மல்லாகம் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அச்சுவேலிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## அளவெட்டியில்...

பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி தயாளன் (வயது 45) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை நடாத்திய மல்லாகம் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் மரண விசாரணையின் பொருட்டு சடலத்தை யாழ்.போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## கரவெட்டியில்...

சுட்டுக்கொன்றுள்ளதாகவும் இவர் சுடப்பட்ட இடத்திற்கு அருகில் அவரின் இரத்தத்தினைப் பயன்படுத்தி பெயர் ஒன்றும் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்பட்டிருக்கிறது.

இம் மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் பிரேதபரிசோதனையின்பின் சடலத் தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-10)

## பொத்துவில் பகுதியில் வைத்து...

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது;

ரத்தல் நீர்ப்பாசனக் கால்வாயின் திருத்த வேலைகளுக்காக நேற்று முன்தினம் காலை அவர்கள் சென்றிருந்தனர்.

மாலைவரை அவர்கள் வீடு திரும்பவில்லை இதனையடுத்து உறவினர்களால் தேடப்பட்டனர். அப்போது ஒருவர் பலத்த காயங்களுடனும் ஏனைய 11 பேரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வழமையாக 6 மணிக்கு முன்னர் வீடு திரும்புபவர்கள். ஆனால் அன்று குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னரும் வரவில்லை. இதனையடுத்து அப்பகுதி மக்கள் அன்று விடிய விடிய தேடுதல் மேற்கொண்டனர்.எனினும் அவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை.

இதனையடுத்து நேற்று அதிகாலை 3 மணியுடன் தேடுதல் நடவடிக்கையை நிறுத்தினர். மறுநாள் மீண்டும் தேடுதலில் ஈடுபட்டிருந்தபோது 11 பேர் கழுத்து வெட்டப்பட்டு இறந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

ஒருவர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த சமயம் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

கொலை நடைபெற்றதாகக் கருதப்படும் இடத்தில் சிகரட் துண்டுகள்,சாராயப்போத்தல்கள் போன்றன காணப்படுவதாகவும் சம்பவ இடத்திற்குச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட ஒவ்வொருவரது உடலிலும் ஐந்திற்கும் குறையாத வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மிக மோசமான முறையில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களின் முகங்கள் துணியினால்கட்டப்பட்டிருந்ததாகவும்கூறப்பட்டது.

*ஹர்த்தால் அனுஷ்டிப்பு*

இக் கொலைச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இடம் பெற்ற நிலை காரணமாக பாடசாலைகள்,அரச நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. இதனால் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org